

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | ஜூலை 22, 2021 | புரட்சி 20 | முழக்கம் 21 | விலை: ரூ.3.00


## உ.பி. தேர்தல் முறைகேடுகளுக்கு தயாராகிறார்கள்

# மோடி அமைச்சரவை மாற்றம்: பின்னணி என்ன?

ஆட்சியின் மோசமான தோல்விகளை மறைப்பதற்கும் இந்து தீவிரவாதம் பேசும் நபர்களை அதிகாரப்படுத்தி ஆர்.எஸ்.எஸ்.சை மகிழ்விப்பதற்குமே மோடி அமைச்சரவையை மாற்றியமைத்திருக்கிறார்.

பிற்படுத்தப்பட்டோர், பழங்குடியினர், தலித் மற்றும் பெண்களுக்கு கூடுதல் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளதாகவும் இதை எதிர்கட்சிகள் விரும்பவில்லை என்றும் மோடி மாநிலங்களவையில் அமைச்சர்களை அறிமுகப்படுத்தும் உரையில் குற்றம் சாட்டினார். ஓராண்டு காலமாக வேளாண் சட்டங்களை இரத்து செய்யக் கோரி திறந்த வீதியில் போராடி வரும் விவசாயிகளின் போராட்டத்தை அலட்சியப்படுத்தும் மோடி ஆட்சியைக் கண்டித்து எதிர் கட்சியினர் காட்டிய எதிர்ப்பை மோடி இப்படி திசை திருப்பிப் பேசினார்.

உண்மையில் தலித், பிற்படுத்தப்பட் டோருக்கான உயர் கல்வி - வேலை வாய்ப்புகள் மோடி ஆட்சியில் நிரப்பப்படவில்லை. உயர்ஜாதி ஏழைகள் ஒதுக்கீடு மட்டும் முழுமையாக நிரப்பப்படுகிறது. நாடாளுமன்றத்தில் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையே இதை படம் பிடித்துக் காட்டுகிறது. சமூக நீதி பற்றி கவலைப்படாமல் ‘இந்து’ மதவெறியில் மூழ்கிக் கிடப்பவர்கள் பிற்படுத்தப்பட்டவர்களாக இருந்தாலும் ‘தலித்’ பிரிவினராக இருந்தாலும், என்ன பயன்? தமிழ்நாட்டைச் சார்ந்த பா.ஜ.க. தலைவராக இருந்த முருகன், தீண்டாமை, ஜாதி எதிர்ப்புப் பற்றி வாய் திறந்த வரலாறே இல்லை. இடஒதுக்கீடு குறித்து பேசியதும் இல்லை. ‘நீட்’ தேர்வு வேண்டும் என்கிறார். காவி தரித்து வேலைத் தூக்கிக் கொண்டு முருகன் கோயிலுக்கு ‘யாத்திரை’ போனவர் தான், இப்போது மத்திய இணை அமைச்சர், இவரை தலித் மக்ககளின் உரிமைக்கான பிரதிநிதியாக எப்படி ஏற்க முடியும்?

‘பிரண்ட் லைன்’ ஆங்கில இதழ் (ஜூலை 30, 2021), அமைச்சரவை மாற்றம் குறித்து ஒரு ஆய்வுக் கட்டுரையை வெளியிட்டிருக்கிறது.

அரசின் தோல்விகளை மறைப்பது; இந்து தீவிரவாதிகளை அதிகாரப்படுத்துவது; உ.பி. தேர்தலில் வெற்றி பெறுவது என்பதே அமைச்சரவை மாற்றத்தின் நோக்கம் என்று எழுதியிருக்கிறது. சர்ச்சைக்குரிய இஸ்லாமிய வெறுப்பு இந்துவெறி கருத்துகளைப் பேசி கண்டனங்களுக்கு உள்ளாகிய அனுராக் தாக்கூர், கிரி ராஜ் சிங் ஆகியோருக்கு காபினட் உயர்வு தரப்பட்டு முக்கிய துறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு பேரும் பீம்கோரே கான் வழக்கில் தீவிரவாதிகள் என்ற குற்றச்சாட்டில் ‘உபா’ சட்டத்தில் கைது செய்துள்ள இடதுசாரி சிந்தனை யாளர்களையும் சிறைக்குள்ளே சாகடிக்கப்பட்ட ஸ்டேன் சுவாமியையும் மிகக் கடுமையாகத் தாக்கிப் பேசியவர்கள், இவர்களை சிறையில் அடைத்தது சரி தான் என்று துணிவோடு பேசியதற்காக இவர்களுக்கு பரிசாக முக்கிய துறைகளை ஒதுக்கியிருப்பது ஆர்.எஸ்.எஸ். வட்டாரத்தை மகிழ்ச்சிப்படுத்தியிருக்கிறது என்று அந்தக் கட்டுரையில் எழுதப்பட்டுள்ளது.

ஸ்டேன் சுவாமி சிறையில் கொல்லப்பட்ட அதே வாரத்தில் உ.பி.யில் உள்ளாட்சி தேர்தல் நடந்தது. தேர்தல் நடத்தும் அதிகாரத்தை ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. வன்முறையாளர்களிடம் ஒப்படைத்து விட்டார் உ.பி. முதல்வர் ஆதித்ய நாத். தேர்தல் நடந்த 75 மாவட்டங்களில் பா.ஜ.க. வினரைத் தவிர, எதிர்க் கட்சியினரை குறிப்பாக சமாஜ்வாடி கட்சியினரை வேட்பு மனுதாக்கல் செய்யவிடாமலேயே ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க.வினர் பாதி வழியிலேயே தடுத்து நிறுத்தி விட்டனர். பல பகுதிகளில் வேட்பாளர்களைக் கடத்திப் போய் தனியறையில் அடைத்து, வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட நேரம் முடிந்த பிறகே வெளியே விட்டனர். தேர்லுக்கு முந்தைய கணிப்புகளின்படி சமாஜ் வாடி கட்சி 804 இடங்களிலும் பா.ஜ.க. 601 இடங்களில் வெற்றி பெறும் என்று தகவல்கள் வந்தன. ஆனால் ஜூலை 8ஆம் தேதி மாநில முழுதும் திட்டமிட்ட வன்முறைகளை கட்டவிழ்த்துவிட்டு - சமாஜ் வாடியின் வெற்றி தடுக்கப்பட்டது என்று விரிவாக அக்கட்டுரை பதிவு செய்துள்ளது. ஜூலை 6 - ஸ்டேன் சுவாமி சிறைவாசியாகக் கொல்லப்பட்டார். அதை மறைக்க ஜூலை 7இல் அமைச்சரவை மாற்றத்துக்கு நாள் குறிக்கப்பட்டது. ஜூலை 8ஆம் தேதி உ.பி. உள்ளாட்சித் தேர்தலில் கலவரம் நடத்தி முறைகேடாக பா.ஜ.க. வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்ஷவர்த்தன் முறையாக செயல்படாமல், ‘கொரானா’வைக் கட்டுப்படுத்தத் தவறி விட்டார். அது அவரது தவறு தான் என்ற செய்தியை அவரது பதவி பறிப்பின் மூலம் மோடி உணர்த்த விரும்பினார். அதேபோல் பிரகாஷ் ஜவடேகர் தகவல் ஒளிபரப்புத் துறை பதவியிலிருந்து நீக்கி, ஆட்சியின் சாதனைகளை மக்களிடம் சரியாக எடுத்துக் கூறவில்லை. உண்மையிலே ஆட்சி நன்றாக செய்யப்பட்டது என்ற தகவலையும் மோடி மக்களிடம் கூற விரும்பினார். எப்போதும் சர்ச்சைக்குரிய பேச்சுக்கு பெயர் போனவரும், தேர்தல் வெற்றிக்கு எந்த முறைகேடுகளை செய்யத் துணிந்தவர் என்ற பெயர் பெற்றவருமான கிரிராஜ் சிங் காபினட் அமைச்சராக பதவி உயர்த்தப்பட்டதற்கு எதிர்வரும் உ.பி. சட்டமன்றத் தேர்தலில் அவரது அதிகார முறைகேடுகளை பயன்படுத்துவதற்குத் தான். கூடுதலாக நியமிக்கப்பட்ட 36 அமைச்சர்களில் 5இல் ஒரு பங்கு உ.பி.யைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தேர்தல் களத்தில் இறங்க தயார்படுத்தப்பட்டுள்ளார்கள். உ.பி.யிலிருந்து மட்டும் 16 பேர் மத்திய அமைச்சர்களாக இருக்கிறார்கள். தொழிலாளர் நலத் துறை அமைச்சராக இருந்த உ.பி.யைச் சேர்ந்த சந்தோஷ் கோல்வார் அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டு விட்டார். இவர் மென்மையானவர். ‘கோவிட்’ தொற்றை ஆதித்ய நாத் ஆட்சி சரியாக நிர்வகிக்கவில்லை என்று வெளிப்படையாக குற்றம்சாட்டினார். அதனால் பதவி நீக்கப்பட்டுள்ளார். பீகாரைச் சார்ந்த ரவிசங்கர் பிரசாத் நீக்கப்பட்டதற்கு மற்றொரு காரணம், மோடி, அமீத்ஷாவைவிட அதிகமாக ஊடகங்களில் விளம்பரமாகிறார் இதை ஆர்.எஸ்.எஸ். விரும்பவில்லை என்பது தான்.

மாநிலங்களின் உரிமையில் உள்ள கூட்டுறவுத் துறையை ஒன்றிய அரசு உருவாக்கி அதை அமீத்ஷாவிடம் ஒப்படைத்திருப்பது கடும் சர்ச்சைக்குள்ளாகியுள்ளது. நாடாளுமன்றத்தில் சட்டத் திருத்தம் செய்து உருவாக்க வேண்டிய துறையை சட்டவிரோதமாக மாநில உரிமைகளைப் பறித்து அமீத்ஷாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. என்று ‘பிரண்ட் லைன்’ கட்டுரை கூறுகிறது.

## தேசபக்தி பேசும் ஒன்றிய ஆட்சியின் கதை

# இஸ்ரேல் மென்பொருளைப் பயன்படுத்தி உளவு பார்த்தது அம்பலம்

**மோடி ஆட்சியை எதிர்ப்பவர்களை தேச விரோதிகள் என்று முத்திரை குத்தி, ‘தேசபக்தி’க்கு முழு உரிமை கொண்டாடி வருகிறது பா.ஜ.க. ‘தேச விரோத’ சட்டத்தின் கீழ் சிறுபான்மையினரையும் சமூகத்துக்காகக் குரல் கொடுக்கும் சிந்தனையாளர்களையும் கைது செய்து ஆண்டுக்கணக்கில் சிறையிலடைத்து வருகிறது. இந்த நிலையில் ‘இஸ்ரேல்’ நிறுவனம் உருவாக்கிய ‘மென்பொருளை’ப் பயன்படுத்தி, இந்தியாவில் ஒன்றிய அமைச்சர்கள் 40 பத்திரிகை யாளர்கள், எதிர்க்கட்சித் தலைவர்களின் உரையாடல்களை ஒன்றிய அரசு ஒட்டு கேட்ட அதிர்ச்சியான தகவல்கள் வெளி வந்திருக்கின்றன. இந்த ‘மென் பொருள்’ தனியாருக்கு விற்கப்படுவது அல்ல; அரசுகளுக்கு மட்டுமே விற்பதற்காக இஸ்ரேல் தனியார் நிறுவனம் உருவாக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. ஒன்றிய அரசு இதை மறுத்துள்ளது. ஆனாலும் ‘தி வொயர்’ மின்னிதழ் 18.7.2021 அன்று விரிவாக இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.**

இந்த மென்பொருள் ஆப்பிள் மொபைல்களைக்கூட மிக எளிதில் ஹேக் செய்துவிட முடியும் என்று சொல்லப்படுகிறது. உலகம் முழுவதும் பல்வேறு அரசாங்க உளவு அமைப்புகளால் பயன்படுத்தப்பட்டு வரும் இந்த பெகாசஸ் ஸ்பைவேர் 2019இல் இந்தியாவிலும் பயன்படுத்தப்பட்டு ஏராளமானோரின் வாட்ஸ் - அப் மற்றும் தொலைப்பேசி உரையாடல்கள் ஒட்டுக் கேட்கப்பட்டதாகக் கூறப் பட்டது. ஆனால் அப்போதைய மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்புத்துறை அமைச்சர் ரவிசங்கர் பிரசாத், நாடாளுமன்றத்தில் அரசாங்க நிறுவனங்களில் பெகாசஸ் பயன்படுத்தப்படவில்லை என்று திட்டவட்டமாகக் கூறியிருந்தார். அதேபோல், அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட உலக நாடுகளும் இந்த பெகாசஸ் ஸ்பைவேர் பயன்பாட்டால் கடுமையான பாதிப்புகளைச் சந்தித்து வந்தன.

‘தி வயர்’ ஊடகத்தில் வெளியாகியிருக்கும் அந்த அறிக்கையில், சுமார் 40-க்கும் மேற்பட்ட இந்தியப் பத்திரிகையாளர்களின் தொலைப்பேசி எண்கள் பெகாசஸ் ஸ்பைவேரை பயன்படுத்தப்பட்டு அடையாளம் தெரியாத முகமைகளால் ஹேக் செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த பட்டியலில், இந்துஸ்தான் டைம்ஸ், இந்தியா டுடே, நியூஸ்18, தி இந்து மற்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் உள்ளிட்ட வெகுமக்கள் ஊடகங்களின் மூத்த மற்றும் தலைசிறந்த பத்திரிகையாளர்களின் பெயர்கள் இடம் பெற்றிருக்கிறது.

அடையாளம் தெரியாத ஏஜென்சி நிறுவனங்களால் பத்திரிகையாளர்கள் குறிவைக்கப்பட்டுள்ளதாகப் பகுப்பாய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதிலும், மேற்குறிப்பிடப்பட்டுள்ள செய்தி நிறுவனங்களின் பத்திரிகையாளர்கள் 2019 இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக 2018-ம் ஆண்டு முதலே குறிப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களின் தொலைப்பேசி தரவுகள் மற்றும் உரையாடல்கள் ஒட்டுக் கேட்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால், பெகாசஸ் ஸ்பைவேரை வடிவமைத்த இஸ்ரேலின் என்.எஸ்.ஓ நிறுவனம் தாங்கள் ஸ்பைவேரை சரிபார்க்கப்பட்ட அரசாங்க அமைப்புகளுக்கு மட்டுமே விற்பனை செய்ததாகக் கூறியிருக்கிறது. அதே போல், தங்களின் ஸ்பைவேரை பயன்படுத்தி பத்திரிகையாளர்களின் தொலைபேசிகளை ஹேக் செய்த வாடிக்கையாளர்களின் அடையாளங் களைப் பொதுவெளியில் பகிரங்கப்படுத்தவும் இஸ்ரேல் நிறுவனம் தயாராக இல்லை என்று ‘தி வயர்’ குறிப்பிட்டிருக்கிறது.

இந்த ஸ்பைவேர் பட்டியலில் இலக்காகி இருக்கும் 40 இந்தியப் பத்திரிகையாளர்களில் குறிப்பாகச் சிலர், சில சம்பவங்களுக்கு பிறகும், சில காரணங்களுக்காக குறி வைக்கப்பட்டுள்ளதாகச் செய்தி நிறுவனங்கள் தங்களது ஆய்வில் கண்டறிந்துள்ளன. தி வயர் ஊடகத்தின் இரண்டு நிறுவன ஆசிரியர்களின் பெயர்கள் இந்த பட்டியலில் இடம் பெற்றுள்ளது. இணையதள இதழும் மோடி ஆட்சிக்கு எதிரான செய்திகளை துணிவுடன் வெளிப்படுத்தி வரும் ‘தி வயரின்’ ஆசிரியர் மற்றும் பங்களிப்பாளரான பத்திரிகை யாளர் ரோகினி சிங் ஆகியோரது தொலைப்பேசி தரவுகள் ஹேக் செய்யப்பட்டிருக்கிறது. அதில், ரோகினி சிங் குறிப்பாக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா குறித்தும், அவரது மகன் ஜெய் ஷா மற்றும் பிரதமர் நரேந்திர மோடியுடன் இணக்கமாக இருந்து வந்த பிரபல தொழிலதிபர் நிகில் ஆகியோர் இடையேயான வணிக விவகாரங்கள் குறித்து தி வயரில் எழுதிய பிறகு, கண்காணிப்பு வளையத்தில் வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அதே போல், இந்தியன் எக்ஸ்பிரஸ் முன்னாள் பத்திரிகையாளர் சுஷாந்த் சிங் 2018-ன் நடுப்பகுதியில் இலக்காகியிருக்கிறார். சுஷாந்த் பிரான்ஸ் ரஃபேல் போர் விமான விவகாரம் குறித்ததான விரிவான கவர் ஸ்டோரி எழுதிய பிறகே அவருடைய தொலைப் பேசி உரையாடல்கள் ஒட்டுக் கேட்கப்பட்டுள்ளது என செய்தி நிறுவனங்களின் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. இந்தியப் பத்திரிகையாளர்கள் அதுவும் மத்திய அரசுக்கு எதிராகச் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டவர்கள், செய்தி வெளியிட்டவர்கள் என ஒரு சிலர் மட்டுமே குறிப்பாகக் குறிவைக்கப்பட்டுள்ளதால் இந்திய அரசாங்கமும் இஸ்ரேல் நிறுவனத்தின் வாடிக்கையாளரா? என்று கேள்வி எழுகிறது. ஆனால், மத்திய அரசு இந்த அறிக்கை வெளியான சில நிமிடங்களில் மறுப்பு தெரிவித்திருக்கிறது.

தலையங்கம்

# புத்தர் காலம் தொடங்கி ரஜினி அரசியல் வரை

நடிகர் ரஜினிகாந்த் அரசியலுக்கு முழுக்கு போட்டுவிட்டதாக அறிவித்துவிட்டார். அவர் உருவாக்கிய மக்கள் மன்றங்களும் கலைக்கப்படும் இரசிகர் மன்றமாகவே செயல்படும் என்றும் தெளிவாக்கி விட்டார்.

இரஜினியை தமிழக அரசியலில் களமிறக்கி மீண்டும் சனாதனத்தை, மனுவாதத்தை உயிர்ப்பித்துவிடலாம் என்று திட்டம் போட்ட சனாதன சக்திகள் படுதோல்வி அடைந்து நிற்பதை நாம் கண்கூடாக பார்க்க முடிகிறது. இந்தப் போராட்டம் புத்தர் காலத்திலேயே தொடங்கிய போராட்டம். வேத காலத்தை மீண்டும் புதுப்பிக்க வேண்டும் என்பதற்காக, ஒவ்வொரு காலகட்டத்திலும் மனுவாத சக்திகளும், சனாதன சக்திகளும் தங்களை உயர்பித்துக் கொள்கின்ற போராட்டத்தை நடத்திக் கொண்டே தான் வந்திருக்கின்றன. டார்வின் கூறுகிறார், ‘சூழலுக்கேற்ப தன்னை தகவமைத்துக்கொள்ளாத எந்த உயிரினமும் நிச்சயமாக உயிர் வாழ முடியாது. அது மடிந்து போகும்’ என்று கூறினார். ஆனால் வெகு மக்களுக்கு விரோதமான இந்த சனாதன மனுதர்ம தத்துவத்தை மீண்டும் மீண்டும் உயிர்ப்பித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக படாதபாடுபட்டுக் கொண்டிருக்கிறது ஒரு கூட்டம்.

பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலேயே அந்த ஆட்சியை தங்களுக்கு ஏற்ற வகையில் வளைத்துப் போட்டுக் கொண்டு உயர்ந்த பதவிகளையெல்லாம் இவர்கள் பிடித்துக் கொண்டார்கள். திலகர் தங்களுக்கான தலைவராக வந்துவிட்டார் என்று துள்ளி குதித்தார்கள். நாடு இந்து இராஷ்டிரமாக மாறப் போகிறது என்று கனவு கண்டார்கள். திலகருக்குப் பின் காந்தியின் தலைமை வந்தது. இந்து இராஷ்டிர கனவு தகர்த்து ஒழிக்கப்பட்டது. காந்தியின் தலைமையில் நடைபெற்ற சுதந்திரப் போராட்ட காங்கிரசிலும் பிறகு பார்ப்பனிய சனாதனம் தன்னை நுழைத்துக் கொண்டது. ஒரு கட்டத்தில் அது காந்தியினுடைய உயிரையே பறித்துக் கொண்டது. அதற்குப் பிறகு காங்கிரஸ் கட்சி சனாதன கட்சியாக மாறிய சூழ்நிலையில், தமிழகத்தில் சனாதன சக்திகளிடமிருந்து பெரியார் காமராசரை மீட்டெடுத்தார். காமராசர், திராவிடத்தினுடைய தலைவராக உலா வந்தார்.

அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் அரசியலுக்கு வரத் தொடங்கிய காலகட்டம். திராவிட முன்னேற்றக் கழகத்தை இராஜாஜி என்ற இராஜகோபாலாச்சாரி தனது பிடிக்குள் கொண்டு வந்தார். அண்ணா இராஜாஜியை சாதுர்யமாகப் பயன்படுத்திக் கொண்டார். 1967 இல் அதிகாரத்திற்கு வந்தவுடன் இராஜாஜியின் உறவை துண்டித்துக்கொண்டு பெரியாரின் பக்கம் வந்து சேர்ந்தார் அண்ணா. அப்போதும் சனாதன தர்மம், மனுவாதம் தோற்றுப் போய் விட்டது.

அதற்குப் பிறகு கலைஞர் வந்தார். கலைஞர் ஆட்சியை சனாதன கூட்டத்தால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை. எனது ஆட்சி சூத்திரர் ஆட்சி தான் என்று பிரகடனப்படுத்தினார் கலைஞர். மனுவாதிகள் காலத்திற்காகக் காத்திருந்தார்கள். எம்.ஜி.ஆர் வந்தார். அவரைத் தூக்கிப் பிடித்தார்கள். தங்களுக்கான ஆட்சி வந்துவிட்டது என்று துள்ளி குதித்தார்கள். எம்.ஜி.ஆர் திராவிட இயக்கத்தின் அடிப்படை இலட்சியங்களில் பல ஓட்டைகளைப் போட்டார். ‘கட்சி’யை இந்துமயமாக்கும் முயற்சிகள் தொடங்கின. ஆனாலும்கூட சமூக நீதிக்கு எதிராக தொடங்கிய அவரது நடவடிக்கைகள் அவருக்குப் பின்னடைவையும் தோல்வியையும் மக்களிடம் கொடுத்தக் காரணத்தினால் அவர் அப்படியும், இப்படியும் தள்ளாடிக்கொண்டு சமூகநீதியின் பக்கமே வந்து சேர வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளானார். எம்.ஜி.ஆர் மறைவிற்குப் பிறகு பார்ப்பனர்கள் அவர்கள் விரும்பிய ஒரு தலைமை கிடைத்து விட்டது. ஆம், அதுதான் ஜெயலலிதாவின் ஆட்சி.

இராஜகோபாலாச்சாரிக்குப் பிறகு அரசியலில் தங்களுக்கான தலைமை கிடைத்துவிட்டது என்று பார்ப்பனர்கள் குதூகளித்தார்கள், மகிழ்ச்சியில், துள்ளிக் குதித்தார்கள். எவ்வளவு பெரிய ஊழல்கள் ஜெயலலிதா ஆட்சியில் நடந்தாலும் அது புனித ஆட்சி என்று போற்றினார்கள். சங்கராச்சாரியையே கைது செய்து ஜெயலலிதா சிறையில் போட்டாலும்கூட குறை கூறாமல் அந்த ஆட்சியை பாதுகாக்கத்தான் விரும்பினார்கள்.

ஒரு சங்கராச்சாரி போனால் மற்றொரு சங்கராச்சாரியை உருவாக்கிக் கொள்ள முடியும். ஆனால், அரசியலில் ஒரு ஜெயலலிதாவை இழந்துவிட்டால், வரலாற்றில் வேறு ஒரு ‘ஜெயலலிதா’ கிடைக்கவே மாட்டார் என்ற தெளிவான புரிதல், பார்ப்பனிய வேத மரபினருக்கு இருந்தது. வைதீக மரபில் வளர்ந்த ஜெயலலிதா தன்னை எம்.ஜி.ஆர். வாரிசாக்கிக் கொள்ளும் முயற்சியில் பார்ப்பனிய அதிகார மய்யங்கள், பார்ப்பனிய ஊடகங்களின் உதவியோடு வெற்றியும் பெற்றார். மிகவும் ஒடுக்கப்பட்ட சமூகப் பின்புலத்திலிருந்து முதல்வராக உயர்ந்த கலைஞரை சகித்துக் கொள்ளவே முடியாத ‘வேத மரபு’ பார்ப்பனியர்கள், திராவிட இயக்கக் கொள்கைகளை வீழ்த்த, ‘கலைஞர் வெறுப்பு’ என்ற அரசியலை சாமர்த்தியமாக உருவாக்கினர். பார்ப்பனிய வலையில் சிக்கிய எம்.ஜி.ஆர். தொடங்கி வைத்த அந்த அரசியலை ஜெயலலிதாவும் முன்னெடுத்தார்.

பார்ப்பனரல்லாத விளிம்பு நிலை மக்களுக்கான பெரியார்–அண்ணாவின் ‘திராவிட கோட்பாட்டை’ ஊடுருவி அழிக்கும் முயற்சிகள் நடந்தன. இடஒதுக்கீடு கொள்கையில் கை வைக்க எம்.ஜி.ஆர். முனைந்தபோது தமிழ்நாடு அதை ஏற்றுக் கொள்ளாத நிலையில் எம்.ஜி.ஆர். ஒரு முடிவுக்கு வந்தார். இடஒதுக்கீடு கொள்கை மாநில உரிமை என்ற கருத்துகளில் சமரசம் செய்து கொண்டு தான் இந்த ஊடுருவலை நடத்த முடியும் என்பதே அவர் கற்ற பாடம். எம்.ஜி.ஆரிடமிருந்து இந்த பாடத்தைக் கற்றுக் கொண்ட ஜெயலலிதா, அதே வழியில் பார்ப்பனிய ஆட்சியை நடத்தினார். ஒரு கட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கடும் எதிர்ப்பாளராகவும் ஈழத் தமிழர்களின் தேசியத் தலைவர் பிரபாகரனை தூக்கில் போட வேண்டும் என்றும் சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றிய ஜெயலலிதா, பிறகு தி.மு.க. எதிர்ப்பு அரசியலுக்காக ஈழ விடுதலை என்ற நிலைப்பாட்டை எடுத்தார். ஜெயலலிதா ஈழ விடுதலை ஆதரவை பார்ப்பன சக்திகள் சகித்துக் கொண்டு ஜெயலலிதாவை முழுமையாக ஆதரித்தன. இந்த நிலையில் ஜெயலலிதாவின் திடீர் மரணம் பார்ப்பனிய மனுவாத சக்திகளுக்கு அதிர்ச்சியாகி விட்டது.

ஜெயலலிதாவை அடுத்து அஇஅதிமுக.வை இரண்டாக உடைத்து தங்களுக்கான சாதகமான அமைப்பை உருவாக்குகிற முயற்சியில் ஈடுபட்டார்கள். பிறகு இரஜினிகாந்த் கிடைத்தார். ஆகா ஜெயலலிதாவிற்குப் பிறகு அற்புதமான தலைமை கிடைத்துவிட்டது இனி இரஜினிகாந்தை வைத்து சனாதனத்தை மீட்டெடுப்போம் என்று அவர்கள் திட்டம் போட்டார்கள். இரஜினியை தூக்கி வைத்து கொண்டாடினார்கள். இரஜினி தான் இந்த நாட்டினுடைய ஆட்சியை தீர்மானிக்கப் போகிறவர் என்றெல்லாம் சொன்னார்கள்.

ஆனால், சமூகத்தினுடைய சூழலையும் மக்களுடைய மனநிலையையும் இரஜினிகாந்த் சாமர்த்தியமாகப் புரிந்து கொண்டு தன்னை இந்தப் பிடியில் சிக்காமல் விடுவித்துக் கொண்டார். இனி அரசியலுக்கே நான் வரப் போவதில்லை என்ற திட்டவட்டமான முடிவுக்கே வந்துவிட்டார். இது ஒரு முக்கிய திருப்பம். பார்ப்பனியத்துக்குப் பேரிடி!

இப்போது முழுமையான திராவிடத்தினுடைய ஆட்சி மு.க ஸ்டாலின் தலைமையில் வந்துவிட்டது. ஒரு பார்ப்பன அமைச்சரோ ஒரு பார்ப்பன சட்டமன்ற உறுப்பினரோ இல்லாத சட்டமன்றம் உருவாகியிருக்கிறது. . இந்த ஆட்சியில் ஓட்டை போட முடியாமல் இவர்கள் பரிதவித்துக் கொண்டிருக்கிறார்கள். அடுத்து என்ன செய்யலாம் என்ற திட்டங்களுக்காக அவர்கள் யோசித்துக் கொண்டே இருக்கிறார்கள். ஆனால் ஒன்றை மட்டும் நாம் திரும்பத் திரும்பக் கூற விரும்புகிறோம். சமூக சூழலுக்கேற்ப மாற்றிக்கொள்ளாத எந்த உயிரும் உயிர்வாழ முடியாது. சமூக மாற்றத்திற்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்ள விரும்பாமல் சமூக மேலாதிக்கத்தையும், வெகு மக்கள் தங்களுக்கு அடிமையாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தையும் சனாதனமும், மனுதர்மமும் வைத்திருக்கின்ற வரை அது மீண்டும் மீண்டும் தோற்றுக்கொண்டு தான் இருக்கும். உயிர்ப்பித்துக்கொள்ளவே முடியாது இதுதான் அறிவியல் என்பதை அவர்கள் இனிமேலாவது புரிந்து கொள்ள வேண்டும்.

## வினா விடை

- எனது சுய விவரக் குறிப்பில் ‘கொங்கு நாடு’ என்று குறிப்பிட்டிருந்தது – அச்சுப் பிழை.
  **– அமைச்சர் முருகன் பேட்டி**

  அமைச்சர் பதவி அறிவிப்பிலும் அச்சுப் பிழை ஏதும் இல்லையே – பாத்துக்குங்க.

- அரசு கட்டுப்பாட்டிலுள்ள கோயில்களை விடுவித்து இந்து அமைப்புகளிடம் ஒப்படைக்க மோடி ஆட்சி சட்டம் இயற்ற வேண்டும்.
  **– விசுவ இந்து பரிஷத்**

  ‘கடவுள்கள்’ கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வர வேண்டும் என்று ஏன் கேட்க மறுக்கிறீங்க. கடவுள் சக்தி மீது உங்களுக்கே நம்பிக்கை இல்லையா!

- ‘பிராமணர்’களின் பாது காப்பை உறுதி செய்ய பகுஜன் சமாஜ் ஆட்சி அமைய வேண்டும். **– மாயாவதி**

  இதற்காகத்தான் அம்பேத்கரும் கன்ஷிராமும் உழைத்தார்களா, ஜீ?


- 6 ஆண்டுகாலத்தில் 326 தேச துரோக வழக்கில் 6 பேருக்கு மட்டுமே தண்டனை.
  **– உள்துறை அமைச்சர்**

  ஆக, 320 தேசபக்தர்களை, கண்டுபிடித் திருக்கிறீர்கள்!

- அ.தி.மு.க. ஆட்சியில் அடையாறு ‘தொல்காப்பியப் பூங்கா’ பெயர்ப் பலகை நீக்கப்பட்டது; இப்போது மீண்டும் வைக்கப்பட்டுள்ளது. **– செய்தி**

  தொல்காப்பியர் – சசிகலா ஆதரவாளர் என்று நினைத்து விட்டார்கள் போல.

## பிச்சைக்கு வந்தவன் பெண்டுக்கு மாப்பிள்ளை



‘பிச்சைக்கு வந்தவன் பெண்டுக்கு மாப்பிள்ளை’ என்பது போல், நாம் கட்டின கோயிலைக் கொண்டு வயிறு வளர்க்க ஏற்பட்டவர்கள் இப்போது நம்மை வெளியில் தள்ளி கதவைச் சாத்துவதென்றால் நமது மானங்கெட்ட தன்மைக்கு இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும்.

மதுரைக் கோயிலில் ஸ்ரீமான் இராமநாதனை உள்ளே வைத்து அடைத்தும் அவரைத் தேங்காய் உடைக்காமல் தடுத்ததும் எதைக் காட்டுகிறது? திருவண்ணாமலைக் கோயிலில் ஸ்ரீமான் கண்ணப்பரையும் மற்றவர்களையும் உள்ளே விடாமல் கதவை மூடிய விஷயம் கோர்டில் இருப்பதால் அது முடியட்டும். மற்றபடி, மதுரை விஷயத்தைப்பற்றி நமக்கு ஏற்பட்ட அவமானம் பொறுக்கக் கூடியதல்ல. இது போலவே, கொஞ்ச நாளைக்கு முன் தென்காசி கோயிலிலும் தேவாரம் படித்த பிறகு பிரசாதம் வாங்குவது தங்களுக்கு அவமானம் என்பதாக கருதி, அங்குள்ள பார்ப்பனர்கள் கோயில்களை விட்டுப் போய் விட்டது மட்டுமல்லாமல், சுவாமி எழுந்தருளும்போது கதவுகளை மூடிக் கொண்டார்களாம். தேவாரம் படிக்கக் கேட்பதும் அதற்குப் பிறகு பிரசாதம் வாங்குவதும் இந்தப் பார்ப்பனர்களுக்கு அவமானமாய்த் தோன்றினால், நம்மைத் தேங்காய் பழம் உடைத்து வைத்துக் கும்பிட வேண்டாமென்றால் அது எவ்வளவு பெரிய இழிவு என்பதை அவர்களே சொல்லட்டும்.

‘குடிஅரசு’ 13.02.1927

# பிரிட்டிஷ் இந்தியா – மாநில உரிமைகளை வழங்கியது; ‘இந்துத்துவ’ இந்தியா இருக்கும் உரிமைகளைப் பறிக்கிறது

*கூட்டாட்சித் தத்துவத்தைக் குலைத்து ஒற்றை ஆட்சியை நோக்கிச் செல்லும் ஆபத்துகள் அரங்கேறி வருகின்றன. சட்டத்தில் இடம் பெற்றுள்ள ‘ஒன்றியம்’ என்ற சொற்றொடரே மனுவாதிகளுக்கு கசக்கிறது. இந்தப் பின்னணியில் பிரிட்டிஷ் இந்தியா தொடங்கி மோடி ஆட்சி வரை நடந்த மாநில உரிமைகள் தொடர்பான சுருக்கமான வரலாற்றுப் பதிவே இக்கட்டுரை.*

**விடுதலை இராசேந்திரன்**

சங் பரிவாரங்களும் மனுவாதிகளும் ‘இந்துக்களின் நாடு’ - ‘இந்து இராஷ்டிரம்’ என்று இப்போது பேசுகிறார்கள். ‘தாலிபான்கள்’ இஸ்லாமிய மதவெறியை ஆட்சி அதிகாரமாக்க துப்பாக்கிகளைத் தூக்கி நிற்கிறார்கள். ‘இஸ்லாமிய’ நாடுகள் பல மன்னராட்சிகளின் கீழ் இருந்து வருகின்றன. அது போல ‘இந்து ராஷ்டிரம்’ உருவாக்குவதற்கு வேத காலத்துக்கு மீண்டும் திரும்புவதற்கு ‘இராமாயணம்-மகாபாரத’ காலத்துக்குத் திரும்பியாக வேண்டும். அல்லது சத்திரிய வம்சத்தைச் சார்ந்தவர்களை அரசனாக்கி, அவரின் இராஜகுருவாக இருந்து, வேத பண்டிதர்கள் ஆட்சி அதிகாரத்தை வழி நடத்த வேண்டும். இவற்றிற்கெல்லாம் பெரும் முட்டுக் கட்டையாக இருப்பது நாடாளுமன்றம், ஜனநாயகம், நீதித் துறையும் நான்காவது தூண் என்று அழைக்கப் படும் மக்ககள் கருத்துகளை உருவாக்கும் ஊடகங் களும் தான்.

அதனால் தான் ‘இந்து இராஷ்டிரம்’ என்ற மனுவாத பார்ப்பனிய ஆட்சியை உருவாக்குவதற்குத் தடையாக நிற்கும் நாடாளுமன்ற ‘ஜனநாயகத்தை’ சிதைக்கிறது. மொழி வழி மாநிலங்கள் அரசியல் சட்டம் வழியாக உருவாக்கிய சட்டமன்ற இறையாண்மை என்ற உரிமைகளைப் படிப்படியாகப் பறித்து ஒற்றை ஆட்சி நோக்கி நாட்டை இழுத்துச் சென்றால் மட்டுமே ‘இந்து இராஷ்டிரா’ பார்ப்பனிய கனவை நினைவாக்கிக் கொள்ள முடியும் என்று பார்ப்பனிய மனுவாதம் திட்டமிட்டு காய் நகர்த்துகிறது. மனுவாதத்துக்கு பலியான பெரும்பான்மை ‘சூத்திர பஞ்சம’ மக்களின் வாக்குகளை பல்வேறு மோசடிகள் (குறிப்பாக - வாக்கு எந்திரங்களை தவறாகப் பயன்படுத்துதல்) தேர்தல் ஆணையத்தை சட்டத்துக்குப் புறம்பாக செயல்பட வைத்தல்; நீதிமன்றங்களை முறை கேடாகப் பயன்படுத்தி தீர்ப்புகளைப் பெறுதல்; ‘இந்துத்துவ’ சிந்தனையாளர்களை நீதிமன்றத்துக்குள் நீதிபதியாக படிப்படியாகக் கொண்டு வந்து நுழைத்தல் என்ற பல்வேறு சதித் திட்டங்கள் திட்டமிட்டு அரங்கேறி வருகின்றன.

இந்த அரசியல் பின்னணியில் சட்டமன்ற அமைப்புகள் இந்தியாவில் நிறுவுவதற்குக் காரணமான பிரிட்டிஷ் அதிகாரி மெக்காலே; அந்த சட்டமன்றங்கள் மக்கள் பிரதிநிதிகளால் தேர்ந் தெடுக்கப்பட வேண்டும் என்று மக்கள் உரிமைக்குக் கதவு திறந்து விட்ட நாத்திகர் சார்லஸ் பிராட்லா ஆகிய நன்றிக்குரிய பிரிட்டிஷ் அதிகாரிகள் பற்றி கடந்த இதழில் குறிப்பிட்டிருந்தோம். அந்த வரிசை யில் இடம் பெற்ற மூன்றாவது அதிகாரி இந்தியாவில் ஆளுநராக இருந்த சார்லஸ் ஸ்டிரொவல்சன் - இதற்காக தனது பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்தே போராடக் கூடிய ‘மானுடம்’ அவருக்கு இருந்தது. இன்றைய ஆளுநர்களைப் போல ‘கங்காணி’களாக அவர் செயல்பட விரும்பவில்லை. மாறாக மானுடத்தை நேசித்தார். ‘அன்னியர்’களாக ஆட்சி செலுத்த வந்தவர்களிடம் கூட ஆளப்படும் மக்களின் மீது கரிசனம் அவர் களுக்கு இருந்தது.

யார் அந்த டிரெவெல்யன் யார்?

சென்னை-பம்பாய் மாகாண உரிமைகள் பறிக்கப்பட்டு, கல்கத்தாவில் மத்திய அரசிடம் சரணடையச் செய்த 1833ஆம் ஆண்டு சட்டத்தை பல மாகாண அரசுகள் ஏற்றுக் கொண்டபோது போர்க்கொடி உயர்த்தியது அன்றைக்கும் சென்னை மாகாணம் தான். அதுவும் சென்னை மாகாண ஆளுநராக இருந்த சர். சார்லஸ் டிரெவெல்யன். முதுகெலும்போடு இந்த பிரிட்டிஷ் அதிகாரி தமிழ் மக்களின் உணர்வுகளைப் பிரதிபலித்தார். எஜமான விசுவாசிகளாக சட்டத்தின் நெறிமுறைகளை மீறி எப்படியாவது பதவியில் ஒட்டிக் கிடக்கும் கங்காணி ஆளுநர்களைத்தான் சுதந்திர இந்தியா பார்த்து வருகிறது. நேர்மையுடன் செயல்பட்ட ஆளுநர்கள் என்பவர்கள் அபூர்வத்திலும் அபூர்வம். புகையிலை வரி, உப்பு வரி, தொழில் வரி என்று பிரிட்டிஷ் ஆட்சி மாகாணங்களுக்கு விதித்த அத்தனை வரிகளையும் எதிர்த்தார். ‘வரி போடுவதை நிறுத்தி, அரசின் வீண் செலவுகளை குறையுங்கள்’ என்று இடித்துரைத்தார். மாகாண அரசுகளின் ஒப்புதல் இன்றி எப்படி வருமான வரி போடுவீர்கள் என்று தட்டிக் கேட்டார். எதிர்ப்பை வெளிப்படையாகப் பேசினார். பத்திரிகைகளில் செய்தியாகப் பதிவிடச் செய்தார். ஆடிப் போனது கல்கத்தாவில் இருந்த பிரிட்டிஷ் மத்திய ஆட்சி. 14 மாதங்கள் மட்டுமே அவரை பதவியில் நீட்டிக்க விட்டது பிரிட்டிஷ் ஆட்சி. அவரை இங்கிலாந்துக்கே திரும்பி வர உத்தரவிட்டது. அவரை இங்கிலாந்துக்கு திருப்பி அனுப்பும் உத்தரவைப் பிறப்பித்த அரசு செயலாளரான பிரிட்டிஷ் அதிகாரி அவருக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டார்.

> “ஒரு நேர்மையான அதிகாரியை இந்தியா இழந்து விட்டது. இது இந்தியாவுக்கு பேரிழப்பு. ஆனால் நீங்கள் செய்த செயல் மத்திய அரசையும் அதன் அதிகாரத்தையும் அதன் கடமைகளையும் எதிர்த்து பொது மக்களை புரட்சிக்குத் தூண்டுவதற்கு இணையாக அமைந்து விட்டது.”

அதற்கு டிரெவெல்யன் அனுப்பிய பதில்தான் தென்னாட்டு மக்களின் உணர்வுகளோடு அவர் ஒன்றி நின்றார் என்பதை விளக்குவதாக அமைந்தது.

- ஆளுநர் டிரெவெல்யன் சென்னை மாகாண உரிமைகளுக்காக பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தினார். அதற்காகவே பதவி நீக்கம் செய்யப்பட்டார்.
- வடநாட்டைவிட தென்னாட்டவர் வேறு பட்டவர்கள் என்று முழங்கிய டரெவெல்யன், தன்னை தென்னாட்டுக் குடிமகனாகவே கருதினார். மக்கள் பேரன்பைப் பெற்றார்.
- மாகாண அதிகாரங்கள் வழங்கப்படுவதும், இலண்டனின் பிரிட்டிஷ் அரசாங்கம் அதை முடக்குவதுமான நிகழ்வுகள் தொடர்ந்து கொண்டே இருந்தன.
- நீதிக் கட்சி தான் இரட்டை ஆட்சிக்கு எதிரான மாகாண சுயாட்சியை அழுத்தமாக வலியுறுத்தியது.

> “வட இந்தியாவிலிருந்து தென்னிந்தியர்கள் வேறுபட்டவர்கள். எங்கள் மாகாணத்துக்கு ஏற்கனவே சட்டமியற்றும் அதிகாரம் இருந்தது. அதைப் பறித்தவர்கள் நீங்கள். எங்களைக் கேட்காமலேயே பறித்தது தவறு. எங்கள் தென்னிந்தியாவில்தான் பிரிட்டிஷ் ஆட்சி முதன்முதலாக நிறுவப்பட்டது. பிரிட்டிஷார் முதலில் கால் பதித்தது எங்கள் சென்னை மாகாணம் தான். அதற்குப் பிறகுதான் பம்பாய்க்கும் கல்கத்தாவுக்கும் போனார்கள். நாங்கள் பெரிய மாகாணத்துக்கு உரியவர்கள். சிறிய மாகாணங்கள் பயப்படு வதைப்போல் நாங்கள் யாருக்கும் பயப்படத் தேவையில்லை” என்று பதில் எழுதினார்.

அவர் இங்கிலாந்து திரும்பும்போது சென்னை மக்கள் பெருமளவு திரண்டு வழியனுப்பி வைத்ததாக வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன. பிரிட்டிஷ் அதிகாரியாக இருந்தாலும் தென்னாட்டுக் குடிமகனாகவே தன்னை அவர் கருதினார். இத்தகைய தேசங்களைக் கடந்த மானுடப் பற்றையும் சொந்த இனத்துக்காரனாக இருந்தாலும் அவனை எதிர்த்து பாதிக்கப்பட்டவர் பக்கம் தான் நிற்பேன் என்ற உணர்வுகளை இந்திய சுரண்டும் வர்க்கக் கும்பலிடம் எதிர்பார்க்க முடியுமா? நிச்சயமாக முடியாது!

1861இல் மாகாணங்களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகள் மீண்டும் வழங்கப்பட்டு இந்திய சட்டமன்றங்களுக்கான சட்டம் வந்தது. சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 20லிருந்து 50 ஆக உயர்த்தி, அதில் மக்களால் தேர்வு செய்யப்படுவோர் 21 பேராக இருப்பர் என்ற சட்டம் 1909லும், அதற்கு 10 ஆண்டுகளுக்குப் பிறகு தேர்தலை மேலும் பரவலாக்கி தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகளை அதிகரிக்கும் சட்டம் 1919ஆம் ஆண்டிலும் வந்தது. அதுவரை ஆளுநர்களின் நிர்வாக சபைகளின் நிழலாக இருந்த சட்டமன்றம், தனித்து இயங்கும் அதிகாரம் படைத்ததாக மாற்றப்பட்டது. அப்போது இதற்குப் பெயர் மதராஸ் லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில் (எம்.எல்.சி.).

1914இல் முதல் உலகப் போர் தொடங்கிய நிலையில், பிரிட்டிஷ் இணைந்திருந்த நேச நாடுகள் அணிக்கு நிபந்தனையின்றி உதவிட இந்தியா தயாராக இல்லை. அப்போது இலண்டனில் இந்தியாவுக்கான அமைச்சராக இருந்த மாண்டேகு, இரண்டு அறிவிப்புகளை வெளியிட்டார். ஒன்று, நிர்வாகத்தின் ஒவ்வொரு பிரிவிலும் இந்தியர்கள் பங்கு பெறுவது அதிகரிக்கப்படும். இரண்டாவது, மக்களுக்கு பொறுப்பேற்கும் ஆட்சியை அமைக்கும் நோக்கத்துடன் சுயாட்சி அமைப்புகள் படிப்படியாக அதிகரிக்கப்படும். இந்த நோக்கங்களை நிறைவேற்ற இந்தியாவுக்கான அமைச்சர் மாண்டேகுவும் இந்தியாவில் கவர்னர் ஜெனரலாக இருந்த சேம்ஸ் ஃபோர்டும் இணைந்து ஓர் அறிக்கை தயாரித்தார்கள். அதுதான் மாண்டேகு சேம்ஸ்போர்டு அறிக்கை. முதல் கட்டமாக அதிகாரத்தைப் பரவலாக்குதலும் (Decentralisation), அடுத்த கட்டமாக அதிகாரங்களைப் பங்கிட்டுக் கொண்டு பிரிந்து கொடுத்தலுமாக (Devolution) அது அமைந்தது. இந்தியாவின் கூட்டாட்சி முறையை நோக்கி வளர்ந்தது என்று ஆய்வாளர் மோசஸ் ஜோன்ஸ் தனது நூலில் (The Government and Politics of India) குறிப்பிடுகிறார். மூன்றாவது கட்டம் தான் மாகாண சுயாட்சி என்றால் மண்டேகு ஜேம்ஸ் ஃபோர்டு சட்டம் இரண்டாம் வகையைச் சார்ந்தது. ஆனால் அதிகாரப் பங்கீட்டை சட்டத்தில் எழுதி வைக்காமல், வைஸ்ராய் விருப்ப அதிகாரத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்டது. மாகாண சட்டசபைக்கு தேர்ந் தெடுக்கப்பட்ட அமைச்சர்களிடம் சோதனையாக பொறுப்புகளில் ஒரு பகுதியை மட்டும் ஒப்படைத் தார்களே தவிர, மாகாண அரசுகளுக்காக ஒதுக்கப் பட்ட அனைத்து அதிகாரங்களும் ஒப்படைக்கப்பட வில்லை. ஆளுநரால் நியமனம் செய்யப்பட்டவர் களிடம் சில அதிகாரங்களும், அமைச்சர்கள் கையில் சில அதிகாரங்களும் ஒப்படைக்கப்பட்டதால் இதற்கு ‘இரட்டையாட்சி’ (Dyarchy) என்று பெயர் வந்தது. இந்த இரட்டை ஆட்சி எப்படி செயல்படுகிறது என்பதை ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டது. குழுவின் தலைவர் ஜின்னா. அக்குழுவில் டாக்டர் ஆர். பராஞ்சிபே, சிவசாமி அய்யர் உள்ளிட்ட இந்தியர்களும் இடம் பெற்றிருந்தனர். இரட்டை ஆட்சி தோல்வி என்ற முடிவுக்குக் குழு வந்தது.

இரட்டை ஆட்சி தோற்று விட்டது என்றும் இந்தக் குறைகளைப் போக்க ஒரே வழி பூரண மாகாண சுயாட்சிதான் என்று பார்ப்பனரல்லாதார் இயக்கமான தென்னிந்திய நல உரிமைக் கழகம் என்ற நீதிக்கட்சி குழுவுக்கு கடிதம் எழுதியது. 1927இல் கோவையில் நடந்த நீதிக் கட்சி மாநாடு இரட்டை ஆட்சியைக் கண்டித்தும், மாகாண சுயாட்சியை வலியுறுத்தியும் தீர்மானம் நிறைவேறியது. அன்றைக்கு பார்ப்பனரல்லாதார் இயக்கமான நீதிக்கட்சி, முஸ்லிம் லீக், காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்து அரசியல் கட்சிகளின் கருத்தோட்டமும் முழுமை யான மாகாண சுயாட்சியை வலியுறுத்துவதாகவே இருந்தன. அதைத் தொடர்ந்து 1928ஆம் ஆண்டு இந்தியாவுக்கு எத்தகைய சீர்திருத்தங்களை அரசியல் சட்டம் வழியாக வழங்கலாம் என்பது குறித்து ஆராய 7 உறுப்பினர்களைக் கொண்ட பிரிட்டிஷ் குழு கருத்துகளைக் கேட்க இந்தியாவுக்கு பிரிட்டிஷ் ஆட்சியால் அனுப்பி வைக்கப்பட்டது. இந்தக் குழுவுக்கு ‘இந்திய சட்ட ஆணையம்’ (Indian Statutory Commission) என்பதே உண்மையான பெயர். ஜான் சைமன் என்ற பிரிட்டிஷ் அதிகாரி தலைமை தாங்கியதால் அது சைமன் குழு என்று பெயர் பெற்றது. 1930ஆம் ஆண்டு இந்த ஆணையம் தனது அறிக்கையை அளித்தது. இந்தியாவில் இரட்டை ஆட்சி முறையை முழுமையாக ஒழிக்கவும் மாகாணங் களுக்கு சுயாட்சி வழங்கவும் குழு அழுத்தமாகப் பரிந்துரைத்தது.

‘இந்தியா’ என்ற நாட்டை துப்பாக்கி முனையில் உருவாக்கிய பிரிட்டிஷ்காரர்கள்தான் மாகாணம் - மாகாண சட்டமன்றங்களை உருவாக்கி தன்னிட மிருந்து அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு முன் வந்தார்கள். அவ்வப்போது வழங்கிய அதிகாரங் களைப் பறிக்க முயலும் முயற்சிகளுக்கு எதிர்ப்புகள் வந்த பிறகு தங்கள் செயல்பாடுகளை மறு பரிசீலனைக்கு உட்படுத்தினார்கள். ‘மாகாண சுயாட்சி’ என்ற நிலை நோக்கி உரிமைகளை நகர்த்தினார்கள். இது தான் பிரிட்டிஷ் இந்தியா. ‘சுதந்திர பார்ப்பன இந்தியா’ உரிமைகளைப் பறிக் கிறது. எதிர்த்தால் மேலும் உரிமைகளைப் பறிக்கிறது. உலக மானுடம் தான் சந்தித்தவற்றில் மிகக் கொடுமையானது ‘பார்ப்பனிய மனுவாதம்’ தான் என்றே கூற வேண்டும். (தொடரும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# பெரியார் பெண்ணியத்தைப் பேசும் ‘சாரா’

*பெரியார் பேசிய ‘பெண் விடுதலை’யை சமூகம் கேட்கத் தொடங்கி யிருக்கிறது. பெண்ணுரிமை இயக்கங்களும் இலக்கியங்களும் திரைப்படங் களும் கவனத்தில் கொள்ளத் தொடங்கிவிட்டன. அதில் ஒன்று தான் ‘சாராஸ்’ மலையாள திரைப்படம்.*



கர்ப்பம் தரிப்பது, குழந்தைப் பேறு ஆகியவற்றை அடியோடு நிராகரிக்கும் பெண்ணாக வளர்கிறாள் சாரா. அவளை நெருங்கும் ஆண்களும் அதனாலேயே விலகு கிறார்கள். திரைத்துறையில் இயக்குநராகும் கனவோடு வளர்ந்த பிறகும் திருமணம், குழந்தைப்பேறு பற்றிய அவளுடைய முடிவில் மாற்றமில்லை. அந்த வகையில் தன்னையொத்த சிந்தனைகொண்ட ஜீவன் என்கிற இளைஞனைக் கண்டதும் சாராவுக்கு பிடித்துப் போகிறது. திருமணம் முடித்து உதாரணத் தம்பதியராகப் பரஸ்பரம் வளர்ச்சிக்கு ஆதரவாக இருவரும் வாழத் தொடங்குகிறார்கள்.

ஜீவன் அலுவலகத்தில் பதவி உயர்வு பெறுகிறான். உதவி இயக்குநராக இருந்தபடி வாய்ப்புகளைத் துரத்தி வந்த சாராவுக்கும் முதல் திரைப்படத்தை இயக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. ஆனால், விபத்துக்கு ஒப்பான நிகழ்வாகக் கருதி, தான் திட்டமிடாத கருவுறலை சாரா எதிர்கொள்கிறாள். அவள் கணவனோ குழந்தை என்றதும் தான் கொண்ட முடிவிலிருந்து மாறுகிறான். தன்னுடைய கனவைக் கலைத்துவிடக்கூடும் என குழந்தைப்பேற்றை தவிர்ப்பதில் சாரா உறுதியாக இருக்கிறாள்.

குழந்தையா, இலட்சியமா என்கிற ஊசலாட்டத்தில் சாரா என்ன முடிவெடுக்கிறாள், சக மனிதர் உணரும் வகையில் அது எந்தளவுக்கு வலுவாகச் சொல்லப்படுகிறது என்பதே சாரா’ஸ் இப்படம். பெண்ணை ஒடுக்கும் திருமணம், குழந்தைப் பேறு, குழந்தை வளர்ப்பினைக் கடமையாகத் திணிக்கும் நமது குடும்ப அமைப்பு ஆகியவை பரவலாகக் கேள்விக்குள்ளாகி வருவதை சாரா வழியாகப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது இந்தப் படம். தாய்மை, புனிதம், தியாகம் இன்னபிற கற்பிதத் தளவாடங்களை எல்லாம் சரியான தருணங்களில் வைத்து உடைத்துப் போடுகிறார்கள். போலி பெண்ணியம், ஆண்கள் ‘அனுமதிக்கும்’ பெண் சுதந்திரம், குடும்ப வாழ்க்கை முழுமை பெறுவதற்கு குழந்தை அவசியம் என்பது உள்ளிட்ட பிரச்சினைகளை போகிற போக்கில் உடைத்து நொறுக்கியிருக்கிறார் இயக்குநர் ஜூடு ஆன்டனி ஜோசப். அதற்கு கூரான வசனங்கள் துணை நின்றுள்ளன.

என் மனைவிக்கு/மகளுக்கு/சகோதரிக்கு எல்லா உரிமைகளையும் தந்திருக்கிறேன் என்று சொல்லும் ஆண்களை நாம் பார்த்திருப்போம். ‘தந்திருக்கிறேன்’ என்றால் என்ன பொருள்? இவ்வளவு நாட்களாக உன் உரிமையை நான் மறுத்து வந்துள்ளேன் என்பது தானே. அவர்கள் தந்து, இவர்கள் பெற்றுக் கொள்ள பெண்ணின் உரிமை என்ன ஆணின் உடைமைப் பொருளா? பெண், ஆண், மாற்றுப் பாலினத்தவர் உள்ளிட்ட இந்தப் புவியைச் சேர்ந்த அனைவரும் சமமான வாழ்க்கை வாழத் தகுதியும் உரிமையும் படைத்தவர்கள்தாம். ஆனால், ஓரினம் மட்டும் தன்னை உயர்வாகவும் மற்ற பாலினங்களைத் தனக்குக் கீழாகவும் நடத்தும் அவலத்துக்கும் ஆணாதிக்கம் என்றே பெயர்.

விண்வெளி வீராங்கனை, நோபல் பரிசு வென்றவர்கள், ஒலிம்பிக் போட்டியாளர்கள், கல்வியாளர்கள், அரசியல்வாதிகள் எனச் சிலரது பெயரைச் சொல்லி பெண்களுக்குச் சுதந்திரம் இல்லாமல்தான் இவர்கள் எல்லாம் இந்த அளவுக்கு உயர்ந்தார்களா எனச் சிலர் கேட்கக் கூடும். உண்மைதான், அன்றிருந்த நிலை இன்று பெண்களுக்கு இல்லை. அதற்காக எல்லாருமே ஏற்றம் பெற்று விட்டார்கள் என்று பொருள் அல்ல. பெண்கள் கட்டப்பட்டிருக்கும் கயிற்றின் நீளம் அதிகரித்துள்ளதே தவிர அறுபடவில்லை.

இப்படிச் சில துறைகளில் சாதித்த ஒன்றிரண்டு உதாரணப் பெண்களிடம் கேட்டால், தாங்கள் போராடிக் களைத்த ஆயிரமாயிரம் கதைகளை அவர்களும் சொல்லக்கூடும். ஓர் ஆணுக்கு மிக இயல்பாகச் நிகழக்கூடிய எல்லாமே பெண்ணுக்கு மந்திரத்தில் மாங்காய் வரவழைப்பதைப் போல நடைமுறைக்குச் சாத்தியமற்றதாகவே இருக்கிறது. ஆண் என்பதே தகுதியாகக் கருதப்படும் அதே வேளை பெண் என்பது இரட்டிப்புப் பின்னடைவாகவே உள்ளது.

எந்தத் துறையிலும் ஆணால் குடும்பப் பொறுப்பு களின் அழுத்தமின்றி முழுமூச்சுடன் ஈடுபட முடிகிறது. அவனை அப்படி வைத்துக் கொள்வது பெண்ணின் கடமையாகச் சொல்லப்படுகிறது. ஆண்களுக்கு இருக்கும் அழுத்தமெல்லாம் பெரும்பாலும் பொருளாதாரம் சார்ந்ததாக இருக்குமே தவிர குடும்பப் பொறுப்புகளின் கட்டுகளின்றி அவர்களால் சுதந்திரமாக இயங்க முடி கிறது. பெண்ணுக்கோ அது இரட்டைக் குதிரை சவாரி யாகத் தான் பெரும்பாலும் அமைந்து விடுகிறது. சமாளிக்க முடிந்தவர்கள் வெற்றிக்கோட்டைத் தொடுகிறார்கள். முடியாதவர்கள் இரண்டில் ஒரு போட்டியிலிருந்து விலகுகிறார்கள். வேலையா, குடும்பமா என்கிற முடிவை எடுக்கிற உரிமைகூடப் பெண்ணுக்கு அளிக்கப்படுவதில்லை.

இன்றைக்கு நிலைமை மாறிவிட்டது; ஆண்களும் வீட்டு வேலைகளில் உதவுகிறார்களே என்று சில குரல்கள் எழலாம். அந்த ஆண்களும் உதவு கிறார்களே ஒழிய, முழுதாகப் பங்கெடுப்பதில்லை. சமையலறை தன் கொடுங் கரங்களால் பெண்ணை எப்போதும் இறுக்கிக்கொண்டிருக்கிறது என்றால் பிள்ளை வளர்ப்பு என்பது மற்றுமொரு சவால். சிறு குழந்தை களைக் கவனித்துக் கொள்வதையும், பாடம் சொல்லித் தருவதையும் மனைவிக்குச் செய்யும் மாபெரும் உதவியாக நினைக்கிற ஆண்களுக்கு நடுவே அவற்றைத் தங்கள் கடமையாக நினைக்கிறவர்கள் மிகக் குறைவு.

ஆண் வெளியே சென்று சம்பாதிக்கிறபோது பெண் வீட்டு வேலைகளைச் செய்வதில் என்ன தவறு என்பது நியாயமான வாதமாகத் தோன்றலாம். ஆனால், வீட்டு வேலைகள் பெண்ணின் விருப்பத் தேர்வா என்பது குறித்து யாருமே பேசுவதில்லை. வீட்டுக்குள்ளேயே புதைந்து விடுகிற பெண்களின் உழைப்பு எந்தக் கணக்கிலும் வருவதே இல்லை. சரி, அவர்கள் வீட்டைவிட்டு வெளியே வந்து சமூகத்துக்கு அப்படியென்ன பங்களித்துவிடப் போகிறார்கள் என்று சில ஆண் மனங்களுக்குத் தோன்றலாம். இவ்வளவு ஆண்டுகளாக ஆண்கள் பங்களித்து வருவதைத் தான் பெண்களும் செய்வார்கள். அதற்காகப் பெண்களுக்கென்று தனியாக ஒரு நாட்டையா உருவாக்க முடியும்? ஆண் செய்கிற எதுவுமே பொருளா தாரத்துடன் நேரடியாகத் தொடர்புபடுத்தப்படுகையில், பெண்ணின் உடலுழைப்பு எந்தக் கணக்கிலும் சேர்வதே இல்லை. இது ஒரு பக்கம் என்றால், ‘பாவம் அவர் வெளியே போய் கஷ்டப்பட்டுட்டு வர்றாரு. நாமதானே அவர் மனம் கோணாம நடந்துக்கணும்’ என்று பெண்ணையே குற்றவுணர்வுக்குத் தள்ளுவதைத் தான் நம் சமூகம் மிக நேர்த்தியாகக் கட்டமைக்கிறது. தனக்கு விருப்பமானதை உடுத்துவதையோ, தேவை யானதை வாங்குவதையோகூட ஏதோ குற்றம்புரிவதைப் போல் பெண்களை உணர வைத்து விடுகிறோம். தன் மீது திணிக்கப்படும் எதைப் பற்றியும் தவறிக்கூட கேள்வி கேட்டுவிடாத வகையில்தான் நாம் பெண்களை வளர்த்தெடுக்கிறோம்.

அடிப்படை உரிமைகளை விட்டுவிடுவோம். தனிப்பட்ட வாழ்க்கை யிலோ திருமண உறவிலோ ஆணுக்குக் கிடைக்கிற எல்லா உரிமைகளையும் பெண் அனுபவிப்பதில்லை. குறிப்பாகப் பாலியல் சார்ந்த செயல்பாடுகளில் பெண்ணின் உரிமையும் சம்மதமும் இரண்டாம்பட்சமாகக்கூட அணுகப்படுவதில்லை. கணவன் என்பதே தனக்குக் கிடைத்திருக்கிற அனுமதியாகப் பலர் நினைத்துக்கொள்கிறார்கள். நாம் தான் பெண்மைக்கும் ஆண்மைக்கும் மாபெரும் கற்பித அகராதிகளை உருவாக்கி வைத்திருக்கிறோமே. அதன்படி அடக்குபவன் ஆண், அடங்கிப் போக வேண்டியவள் பெண். இதில் கொஞ்சம் பிசகினாலும் பெண் தூற்றப்படுவாள். பெண்மை என்கிற கற்பிதத்துக்குள் பொருந்திவிட வேண்டும் என்பதற்காகவே தன் ஆசை, லட்சியம், கனவு எனப் பலவற்றையும் தொலைத்து ‘தியாகிப் பட்டம்’ பெறத் துடிக்கும் பெண்கள் நம்மிடையே ஏராளம். உண்மையில் அது பெருமையல்ல; காலம் காலமாக அவர்களுக்கு நாம் பூட்டி யிருக்கும் விலங்கு என்பதைக்கூட உணராத வகையில்தான் பெண்களை வைத்திருக்கிறோம்.

பாலினம் தொடங்கி, வர்க்கம், சாதி என எல்லா நிலைகளிலும் பாகு பாடு நிலவும்போது தான் அதிகாரப் பிரிவினை இருக்கும். அதிகாரத்தைச் செயல்படுத்துகிற எல்லா அமைப்புகளும் இந்தப் பாகுபாட்டைப் போற்றி வளர்க்கத்தான் செய்யும். இந்த அதிகாரச் சூட்சுமத்தை விளங்கிக் கொள் ளாமல் நாமும் சமூகக் கற்பிதங்களுக்குப் பெண் களின் வாழ்க்கையைப் பலி யாக்குகிறோம். எல்லா நிலைகளிலும் பெண்கள் மீது நாம் செலுத்துகிற ஆதிக்கத்தைவிட இழி வானது வேறில்லை.

**ஆதாரம்: ‘தமிழ் இந்து’ கட்டுரைச் செய்திகள்**

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம்**
**ரூ.200**
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகை யாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049 newsdvk@gmail.com

## தமிழ்நாடு மாணவர் கழகம் நடத்திய ‘காமராசர்’ இணைய கருத்தரங்கம்

கல்வித் தந்தை காமராசரின் 119ஆவது பிறந்தநாளை ஒட்டி இணையவழி கருத்தரங்கம் தமிழ்நாடு மாணவர் கழகத்தின் சார்பாக 18.07.2021 ஞாயிறு மாலை 6 மணியளவில் நடைபெற்றது..

கருத்தரங்கின் முதல் நிகழ்வாக மேட்டூர் அருள்மொழி காமராசர் பற்றிய பாடலைப் பாடினார். ‘காமராசரின் குலக்கல்வி ஒழிப்பு’ என்ற தலைப்பில் பொள்ளாச்சி வினோதினி, ‘காமராசரும் பெரியாரும்’ என்ற தலைப்பில் சென்னை ப்ரீத்தா ராஜன் ஆகியோர் கருத்துரையாற்றினர்.

கருத்தரங்கின் நிறைவாக திராவிடர் விடுதலைக் கழகத்தின் கோவை மாவட்டச் செயலாளர் யாழ் வெள்ளிங்கிரி நிறைவுரையாற்றினார். நிகழ்வை கோவை மனோ ரஞ்சனி நெறியாள்கை செய்தார்.

கருத்தரங்கம் திராவிடர் விடுதலைக் கழகத்தின் முகநூல் பக்கத்தில் நேரலை செய்யப்பட்டது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 22nd July 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN